ஸ்ரீவில்லிபுத்தூர் நகர்மன்றம்
சாதாரணக் கூட்டம்

**2022 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11 ம் நாள் திங்கள் கிழமை காலை 9.30 மணியளவில் நடைபெற உள்ள சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

*முன்னிலை :- திரு. த. ரவிக்கண்ணன், B.B.A,*
*நகர்மன்றத் தலைவர்*

பொருள் எண் : 1

இந்நகராட்சியின் 2021-22 ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு மதிப்பீடும் 2022-23 ம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு திட்ட மதிப்பீடும் தயார் செய்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம். அவசர அவசியம் கருதி மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண் 7545/2021/B1

**தீர்மானம் :-1** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் : 2

தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15-ஆவது மத்திய நிதி ஆணையம், 2022-2023-ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019-ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022-2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை

நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>சொத்துவரி:</u>

குடியிருப்பு கட்டடங்கள் (Residential Building) :

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

குடியிருப்பு அல்லாத கட்டடங்கள் (Non-Residential Building) :

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

<u>காலிமனை வரி சீராய்வு:</u>

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

<u>தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:</u>

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுடு தோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித் தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும்நிதி (Current Liabilities) (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | ரூ.0.39/- |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம்<br>1) TWAD – 0.16/-<br>2) SURVEY 0.54/-<br>3) MANUAL WORKER GENERAL WELFARE FUND – 0.29/- | ரூ.0.99/- |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் (டுபிட்கோ, டுபிசெல், பிற) | இல்லை |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி, நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை)<br>1) PF – 0.25/-<br>2) CPS (EMPLOYEE) - 0.29/-<br>3) CPS (CONTRIBUTION) – 0.29/-<br>4) SPF – 0.002/-<br>5) FBF – 0.004/-<br>6) NHIS – 0.07/- | ரூ.0.91/- |
| | மொத்தம் | ரூ.2.29/- |

மேலும் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு ஒவ்வொரு மாதமும் செலவினங்கள் ஏற்படுகின்றது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | செலவுத் தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | பணியாளர்கள் ஊதியம் | ரூ.0.65/- |
| 2 | அரசுக்கு செலுத்த வேண்டியது (ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் தொகைகளான PF, CPS) | ரூ.0.10/- |
| 3 | அம்மா உணவகத்திற்கு மாதம் ஒன்றிற்கு பலசரக்கு, காய்கறி, கேஸ், பணியாளர்கள் ஊதியம் | ரூ.0.03/- |
| 4 | வாகனங்களுக்கு டீசல் மற்றும் பழுது பணிகள் | ரூ.0.01/- |
| 5 | மின்சாரம் மற்றும் TWAD | ரூ.0.20/- |
| | மொத்தம் | ரூ.0.99/- |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81-A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும்,

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி /காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.
8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

மேலும் கீழ்கண்ட தெருக்களுக்கு மண்டலங்கள் மறு நிர்ணயம் செய்யலாம்.

| வ எண் | புதிய வார்டு எண் | பழைய வார்டு எண் | தெருவின் பெயர் | தற்பொழுது உள்ள மண்டலம் | புதியதாக மாற்றம் செய்யப்பட வேண்டிய மண்டலம் |
|---|---|---|---|---|---|
| 1 | 6 | 1 | மங்காபுரம் மெயின் ரோடு | C- ZONE | B- ZONE |
| 2 | 6 | 2 | மங்காபுரம் மெயின் ரோடு | C- ZONE | B- ZONE |
| 3 | 8 | 2 | மதுரை ரோடு | C- ZONE | B- ZONE |
| 4 | 7 | 2 | மதுரை ரோடு (ஜி. எம் நகர்) | C- ZONE | B- ZONE |
| 5 | 6 | 3 | மங்காபுரம் மெயின் ரோடு | C- ZONE | B- ZONE |
| 6 | 11 | 7 | ஊத்துமலை பரதேசி மடம் தெரு | C- ZONE | B- ZONE |
| 7 | 33 | 33 | கோவிந்தன் நகர் காலணி | C- ZONE | B- ZONE |
| 8 | 33 | 33 | பண்டிட் ஜவஹர்லால் நேரு ரோடு | C- ZONE | B- ZONE |
| 9 | 9 | 6 | பெருமாள்பட்டி 2வது கீழத் தெரு | C- ZONE | B- ZONE |
| 10 | 9 | 6 | கோட்டைத் தலைவாசல் பிள்ளையார் கோவில் தெரு | C- ZONE | B- ZONE |
| 11 | 18 | 21 | சிவஞானபுரம் தெரு | C- ZONE | B- ZONE |
| 12 | 18 | 23 | சந்தைப்பேட்டை தெரு | C- ZONE | B- ZONE |
| 13 | 21 | 27 | அவிட்டன்புரம் தெரு | C- ZONE | B- ZONE |
| 14 | 22 | 27 | ரெங்கநாதபுரம் வடக்கு தெரு | C- ZONE | B- ZONE |
| 15 | 24 | 30 | மேட்டுத் தெரு வடக்கு வரிசை | C- ZONE | B- ZONE |
| 16 | 24 | 30 | மேட்டுத் தெரு தெற்கு வரிசை | C- ZONE | B- ZONE |
| 17 | 32 | 30 | மடவார்விளாகம் கீழரதவீதி | C- ZONE | B- ZONE |
| 18 | 32 | 30 | மடவார்விளாகம் தெற்கு ரதவீதி | C- ZONE | B- ZONE |
| 19 | 30 | 31 | மல்லபுரம் தெரு | C- ZONE | B- ZONE |
| 20 | 31 | 31 | இராஜபாளையம் ரோடு | B- ZONE | A- ZONE |
| 21 | 31 | 32 | மல்லபுரம் தெரு | C- ZONE | B- ZONE |
| 22 | 31 | 32 | முடுக்குத் தெரு | C- ZONE | B- ZONE |

அலுவலக குறிப்பு :-

அரசாணையில் தெரித்துள்ளபடி சொத்துவரி பொது சீராய்வு செய்ய மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்2381/2022/அ2

**தீர்மானம் :-2 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் : 3

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி எல்கைக்குட்பட்ட பட்டதரசியம்மன் கோவிலுக்கு பாத்தியப்பட்ட பின்புறமுள்ள திரு. சோலையப்பன் என்பவருக்கு சொந்தமான காலியிடத்தில் ராட்டினங்களுடன் கூடிய பொருட்காட்சியை நடத்துவதற்கு ( சாய் எண்டர்டெயின்மெண்ட்) கே. மாணிக்கவாசகம் என்பவர் தடையின்மை சான்று கோரி விண்ணப்பம் செய்யப்பட்ட மேற்படி இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டது. மனுதாரர் பொருட்காட்சிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் 8 கடைகள் மற்றும் Dragan, Jeep, Breakdance, Colombus, Jaint Wheel போன்ற இராட்டினங்கள் அமைக்க உள்ள அவைகளின் பரப்பு 59.75 M2 ( 6 யூனிட்க்கு ) 6 x 1200= Rs.7200/- கழிப்பிடத்திற்கு ரூ.250/- சுற்றுப்புற கொட்டமைக்கு ரூ.50/- வீதம் மொத்தம் ரூ.7500/- க்கான தொகையை 28.01.2020 ல் ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் தொடர்பாக கொருட்காட்சி நடத்த அனுப்பிய அனுமதியை நிறுத்தி வைத்து 19.03.2020 ல் இந்நகராட்சி மூலம் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பொருட்காட்சியை மீண்டும் தற்பொழுது நடத்துவதற்கு தடையின்மை சான்று வழங்க மன்ற அனுமதிக்காக.

அலுவலகக்குறிப்பு :- மன்றம் பரிசீலனை செய்து முடிவு செய்யலாம்.

ந.க.எண் 0176/2020/F1

**தீர்மானம் :-3 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் : 4

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட கடைகளுக்கு வசூல் செய்யப்படும் வாடகையுடன் பிடித்தம் செய்யப்படும் சரக்கு மற்றும் சேவை வரியினை ( GST ) ஒவ்வொரு மாதமும் உரிய தலைப்பில் செலுத்திய விபரத்தினை மத்திய அரசின் இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றது. மேற்கண்ட சரக்கு மற்றும் சேவை வரி ( GST ) உரிய தலைப்பில் செலுத்திய விபரத்தினை மத்திய அரசின் இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யும் பணியினை மேற்கொண்டு வரும் திரு. சரவணன், சிவகாசி என்பவருக்கு அதற்கான பட்டியல் தொகை ரூ.13,500/- வழங்க மன்ற அனுமதிக்காக.

அலுவலகக்குறிப்பு :- அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 6970/2011/A3

**தீர்மானம் :- 4 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் : 5

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஒப்பந்தக்காரர்களுக்கு ஏப்ரல் 2021 முதல் டிசம்பர் 2021 வரை சரக்கு மற்றும் சேவை வரி பிடித்தம் செய்து மத்திய அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. அதனை இணைய தளத்தில் பதிவு செய்ய திரு. ஏ. சரவணன் ( Income Tax Practitioner ) அவர்கள் மூலமாக மேற்கொள்ளவும் அதற்கான கட்டணம் ஏப்ரல் 2021 முதல் டிசம்பர் 2021 வரை ரூ.13,500/- வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு :- அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 5715/2017/E1

**தீர்மானம் :-5 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் : 6

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி நகர்மன்ற தலைவர் அவர்களின் அறையில் புதிய கணிணி , பிரிண்ட்டர், டிவி மற்றும் Router இணைய தள வசதியுடன் ஏற்படுத்த வேண்டியுள்ளது. எனவே புதிய கணிணி, பிரிண்ட்டர், டிவி மற்றும் Router இணைய தள வசதியுடன் ஏற்படுத்தவும் அதற்கான உத்தேச செலவு ரூ.1,75,000/- க்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு :- மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் :-6 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் : 7

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி தண்ணீர் தலைமையிடத்தில் 10" போர்வெல் எண் **1** ல் உள்ள 12.5 எச்.பி. சப்மெர்சிபிள் மோட்டார் பழுதடைந்து இயக்க இயலாத சூழ்நிலை உள்ளது. மேற்கண்ட 12.5 எச்.பி. சப்மெர்சிபிள் மோட்டாரில் ரீ வைண்டிங், ரோட்டர், திரஸ்ட், பேடு, கன் மெட்டல் புஸ் பெயிண்ட் அடித்தல் போக்குவரத்து மற்றும் திரும்ப மாட்டுதல் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான செலவு ரூ.21,000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு :-

மன்றம் அனுமதி வழங்கலாம். குடிநீர் விநியோக அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் ஒப்புதல் பெற்று விலைப்புள்ளிகள் கோரியதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

ந.க.எண் 217/2022/E1

**தீர்மானம் :- 7 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் : 8

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 4 பெருமாள்பட்டி மெயின் ரோடு மேல்பக்க தெருவில் உள்ள சமுதாய கழிப்பறையினை மூன்று ஆண்டு குத்தகை அடிப்படையில் வருடம் ஒன்றிற்கு ரூ.5,20,000/- என குத்தகைக்கு எடுத்துள்ள திரு. கோவிந்தராஜ் என்பவர் மேற்கண்ட கழிப்பறைக்கான வாடகை தொகையினை செலுத்தாமல் உள்ளதால் மேற்கண்ட கழிப்பறையினை கடந்த 11.03.2022 ம் தேதி பிற்பகல் முதல் நகராட்சி பணியாளர்களால் பூட்டப்பட்டதாக வருவாய் ஆய்வாளரின் 16.03.2022 ம் தேதிய குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட கழிப்பறைக்கு 11.03.2022 ம் தேதி வரையிலான கேட்பாக ரூ.1,00,000/- ( கேட்பு எண் 130/SC03/00051) என கணிணியில் திருத்தம் செய்யவும் மீதமுள்ள காலங்களுக்கான கேட்பினை கணிணியில் இருந்து நீக்கம் செய்யவும் மேற்கண்ட கழிப்பறையினை பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேற்கண்ட கழிப்பறையினை கேட்பு எண் 130/SC03/00051 க்கான கேட்பு தொகையினை ரூ.1,00,000/- என திருத்தம் செய்யவும் மீதமுள்ள காலங்களான கேட்பினை கணிணியில் இருந்து நீக்கம் செய்ய மன்றத் தலைவரிடம் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

அலுவலகக்குறிப்பு :- அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 6651/2021/A2

**தீர்மானம் :- 8 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் : 9

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளில் அமைந்துள்ள 23704 குடியிருப்புக்கள் மற்றும் நகர்ப்புறபகுதியில் அமைந்துள்ள 2095 வணிக நிறுவனங்கள் தினசரி 15.68டன் அளவிற்கு மக்கும் குப்பைகள் உருவாகிறது. தினசரி சேரமாகும் குப்பைகளை மடவார் வளாகம் **3**டன் அளவு ,மருத்துவர் காலனி 4டன் அளவு, நகராட்சி குப்பைகிடங்கு மேல்பக்கம் வடக்கு பக்கம் **3**டன், அளவு நகராட்சி குப்பைகிடகு மேல்பக்கம் தெற்கு பக்கம் நான்கு 4டன் அளவு ஆகிய நான்கு நுண்உரக்குடில் மையங்களில் உரமாக்குவதற்கான செயல்முறைகள் நடைமுறைபடுத்தப்பட்டு 40 முதல் 45 நாட்களில் உரமாக மாற்றப்படுகின்றது.

மேற்படி நான்கு நுண்உரக்குடில் மையங்களில் மக்கும் குப்பைகளை உரமாக்குவதற்கு EM SOLUTION நுண்ணுயிர் திரவம் தயாரிப்பு செய்திட ஒரு தடைவக்கு 2லிட்டர் தயிர், 5கிலோ வெல்லம் தேவைப்படுகிறது. இந்நகராட்சி ஒவ்வொரு நுண்உரக்குடில் மையங்களில் எப்போதும் மூன்று பேரல்கள் EM SOLUTION நுண்ணுயிர் திரவம் தயார் செய்து சுழற்சி முறையில் பயன்படுத்த வேண்டும். அதன்படி நான்கு உரக்குடில் மையங்களுக்குத் தேவையான தயிர் மற்றும் வெல்லம் தேவைக்கேற்ப அவ்வப்போது வெளிச்சந்தையில் வாங்க வேண்டிய சூழ்நிலை அடிக்கடி ஏற்படுகிறது,

இந்நகராட்சி நான்கு நுண்உரக்குடில் மையங்களுக்கு நுண் உரத்திரவம் தயாரிப்பதற்கு தேவைப்படும் வெல்லம் மற்றும் தயிர் ஆகியவற்றை வாங்குவதற்கான உத்தேச செலவு மாதம் ஒன்றுக்கு ரூ.18000/- ஆகும். மேற்படி தயிர் மற்றும் வெல்லம் போன்றவற்றை அரசு கூட்டுறவு நிறுவனமான Q1189 மம்சாபுரம் கூட்டுறவு பண்டகசாலை லிமிடெட் மம்சாபுரம் மூலம் தேவைக்கேற்ப ஓராண்டிற்கு வாங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு: நகரின் பொதுசுகாதாரம் நலன் கருதி Q 1189 மம்சாபுரம் கூட்டுறவு பண்டகசாலை லிமிடெட் மம்சாபுரம் நிறுவனத்தின் மூலம் தயிர் மற்றும் வெல்லம் கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்- 2082/2022/H1)

**தீர்மானம் :- 9 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் : 10

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி 33 வார்டு பகுதிகளில் அமைந்துள்ள 23,704 குடியிருப்புகள், 2095 வணிக நிறுவனங்கள், 259 தொழிற்சாலைகள் ஆகியவற்றிலிருந்து 24.12 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் தினசரி சேகரமாகிறது. தினசரி நகராட்சி துப்புரவு பணியாளர்கள் மற்றும் தனியார் ஒப்பந்த பணியாளர்கள் மூலம் சேகரிக்கப்படுகிறது. இவற்றில் மக்கும் கழிவுகள் – 15.68 மெட்ரிக் டன் மற்றும் மக்காத கழிவுகள் – 8.44 மெட்ரிக் டன் ஆகும்.

இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் 15.68 மெட்ரிக் டன் மக்கும் கழிவுகளை இந்நகராட்சியின் 4 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நுண் உரக்குடில்கள் மூலம் உரமாக்கப்பட்டு வருகிறது. ஆனால், தினசரி சேகரமாகும் 8.44 மெட்ரிக் டன் மக்காத கழிவுகளான பிளாஸ்டிக் கழிவுகள், ரப்பர் கழிவுகள், துணிக்கழிவுகள், கண்ணாடி பாட்டில்கள் உள்ளிட்ட கழிவுகளை கையாள்வது மற்றும் மக்கச்செய்வது பெரும் சவாலாக உள்ளது.

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பகுதியில் தினசரி சேகரமாகும் திடக்கழிவுகளில் ஒரு முறை பயன்படுத்தப்பட்டு தூக்கி எறிய கூடிய கேரி பைகள் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை பிரித்து மறுசுழற்சி செய்வதற்கு திரு. வீ. மோகன்ராஜ் உறுப்பினர் இந்திய செஞ்சிலுவை சங்கம், அக்சயமணி பிளாஸ்டிக்ஸ், கோவில்பட்டி என்பவர் ஆயுத்தமாக இருப்பதாகவும், கடந்த 5 ஆண்டுகளாக பிளாஸ்டிக் கழிவுகளை மறுசுழற்சி செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும், ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் தினசரி சேகரமாகும் பிளாஸ்டிக் கழிவுகளை மேற்படி நிறுவனத்திடம் ஒப்படைக்கும் பட்சத்தில், சுற்றுச்சூழல் மாசுபடா வண்ணம் மறுசுழற்சி செய்யவும், அதற்கான இயந்திரங்களை நிறுவுவதற்கு தேவையான இடத்தை வழங்குவதற்கும் இந்த இயந்திரங்களை இயக்குவதற்கு தேவையான 60 ஹெச்பி அளவிற்கு மின்சார இணைப்பு பெற்று தரவும், மாதாந்திர மின்கட்டணத்தை அவர்கள் செலுத்தி கொள்ள தயாராக இருப்பதாகவும், மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் தடையில்லா சான்று பெற்று தரவும், 5 முதல் 10 ஆண்டுகளுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டு ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியை 100 சதவீதம் மாசில்லா நகரமாக உருவாக்குவதற்கு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 100% பங்களிப்பில் இத்திட்டத்தை செயல்படுத்திட தயாராக இருப்பதாகவும் விண்ணப்பம் அளித்துள்ளார்.

ஆகவே, இந்நகராட்சியில் 33 வார்டுகளில் தினசரி சேகரமாகும் மக்காத பிளாஸ்டிக் கழிவுகளை மறுசுழற்சி செய்வதற்கும் திடக்கழிவு மேலாண்மை பணிகளை சிறப்புற மேற்கொள்ளும் பொருட்டு, திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 விதி எண்15(V) ன் படியும், 24.08.2018 அன்று வெளியிடப்பட்டுள்ள அரசிதழ் (எண் 303) படியான திடக்கழிவு மேலாண்மை விதிகள் செயல்படுத்துவதற்கான மாநிலக் கொள்கையின் அடிப்படையிலும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.1936/2017/பி3 நாள்:23.01.2019ன் ஒருங்கிணைந்த வழிகாட்டு நெறிமுறைகளின்படி, தனியார் நிறுவனம் அல்லது தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மறுசுழற்சி முறையில் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையிலும், கடந்த 5 ஆண்டுகளாக பிளாஸ்டிக் கழிவுகளை மறுசுழற்சி செய்து கொண்டிருக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் தனியாருக்கு இந்நகராட்சிக்கு சொந்தமான செங்குளம் அத்திகுளம் ஊராட்சியில் அச்சங்குளம் ரோட்டில் அமைந்துள்ள கலவை உரக்கிடங்கில் இடவசதி ஏற்படுத்தி கொடுக்கவும், உரக்கிடங்கில் அமைந்துள்ள பழைய கட்டிடத்தில் பிளாஸ்டிக் கழிவுகளை மறுசுழற்சி செய்வதற்கு உரிய இயந்திரங்களை சொந்த செலவில் பொருத்தி பராமரித்து கொள்வதற்கும் மேற்படி, இயந்திரங்களை இயக்குவதற்கு தேவையான மின்கட்டணம் போன்ற இப்பணிக்கான மொத்த உத்தேச செலவினம் ரூ.13,77,300/-ஐ நமக்கு நாமே திட்டத்தில் 100 சதவிதம் பங்களிப்புடன் மேற்படி நிறுவனம் ஏற்றுக் கொண்டுள்ளதாலும் உரிய நிபந்தனைகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் பிளாஸ்டிக் கழிவுகளை மறுசுழற்சி செய்யும் பணியில் ஈடுபடுவதற்கு அக்சயமணி பிளாஸ்டிக்ஸ், 934A1, சாத்தூர் மெயின் ரோடு, வேலாயுதபுரம், கோவில்பட்டி 628501 நிறுவனத்திற்கு அனுமதி வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடம் அனுமதி பெற வேண்டி கருத்துரு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம்

ந.க.எண்.1959/2022/எச்1

**தீர்மானம் :- 10 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் : 11

அரசாணை எண் 71, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை, நாள் 13.09.2021 ன் படி நகராட்சி பகுதிகளில் நமக்கு நாமே திட்டம் 2021-22 ம் ஆண்டில் செயல்படுத்த ஆணை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள 33 சதவீதம் பொது மக்கள் பங்கு தொகை செலுத்த வேண்டும், மீதமுள்ள தொகை அரசு மானியமாக வழங்கப்படும் என அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பகுதியில் நமக்கு நாமே திட்டம் 2021-22 ன் கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ள 33% பொது மக்கள்

பங்கு தொகை செலுத்தியதின் பேரில் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. இப்பணிகளுக்கு பயனாளர் பங்குத் தொகை பின்வரும் விவரப்படி பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ | பயனாளர் பங்குத் தொகை 33% | பங்குத் தொகை செலுத்தியவர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு 1, சீனியாபுரம் தெருவில் வடிகால் கட்டும் பணி | 1,50,000 | 50,000 | திரு.சி.குழந்தைவேலு |
| 2 | வார்டு 3, கல்லணை ஓடைத் தெருவில் வடிகால் கட்டும் பணி | 2,60,000 | 86,667 | திரு. அ. சடையப்பன் |
| 3 | அய்யம்பட்டி தெரு, தட்டாங்குளம் பட்டித் தெரு, மங்காபுரம் தெரு ஆகிய இடங்களில் சிறுபாலம் கட்டுதல். | 1,60,000 | 53,333 | திரு. அ. சடையப்பன் |
| 4 | வார்டு எண் 7, மங்காபுரம் கிழக்குப் பக்கம் வடக்குத் தெருவில் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | 2,50,000 | 83,333 | திரு.சி.குழந்தைவேலு |
| 5 | வார்டு எண் 8, ராமகிருஷ்ணாபுரம் வடக்குத் தெருவில் தடுப்புச் சுவர் கட்டுதல். | 3,00,000 | 1,00,000 | திரு.சி.குழந்தைவேலு |
| 6 | வார்டு எண் 9, பெருமாள்பட்டி கோட்டைத்தலைவாசல் பிரதான சாலை கீழ்பக்கம் தெற்குத் தெருவில் ஆழ்துளை கிணறு சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் | 2,50,000 | 83,333 | திரு. அ. சடையப்பன் |
| 7 | வார்டு எண் 14, மாரியம்மன் கோவில் தெரு கிழக்குப் பக்கம் கழிப்பிடம் பராமரிப்பு செய்தல் | 5,00,000 | 1,66,667 | திரு. அ. சடையப்பன் |
| 8 | வார்டு எண் 15, மாயாண்டிபட்டி வடக்குத் தெருவில் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல். | 1,00,000 | 33,334 | திரு. அ. கணேஷ் |
| 9 | வார்டு எண் 16, கீழப்பட்டி பிள்ளையார் கோவில் தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 1,10,000 | 36,667 | திரு.வி. அழகர்ராஜ் |
| 10 | வார்டு எண் 17, ஊரணிப்பட்டி தெருவில் உடற்பயிற்சி கூடம் கட்டுதல். | 5,00,000 | 1,66,667 | திரு.சி.குழந்தைவேலு |
| 11 | வார்டு எண் 18, சந்தைப்பேட்டை தெருவில் ஆழ்துளை கிணறு சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல். | 2,50,000 | 83,333 | திருமதி. ஆர். கவிதா |
| 12 | வார்டு எண் 19, பள்ளி வாசல் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 1,00,000 | 83,333 | திரு.சி.குழந்தைவேலு |
| 13 | வார்டு எண் 20, இருளப்பசாமி கோவில் தெருவில் வடிகால் கட்டுதல். | 1,00,000 | 83,333 | திரு.சி.குழந்தைவேலு |
| 14 | வார்டு எண் 21, நந்தவனம்பட்டி தெரு மற்றும் இடைய பொட்டல் தெருவில் சிறுபாலம் மற்றும் வடிகால் கட்டுதல். | 3,00,000 | 1,00,000 | திரு. எம்.கே. ஜின்னா |
| 15 | வார்டு எண் 22, ரெங்கநாதபுரம் கிழக்குத் தெருவில் ஆழ்துளை கிணறு சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல். | 2,50,000 | 83,333 | திரு.<br>கே. செந்தில்குமார் |
| 16 | வார்டு எண் 23, கம்மாப்பட்டி தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 3,90,000 | 1,30,000 | திரு.<br>சி. குழந்தைவேலு |
| 17 | வார்டு எண் 26, கற்பக விநாயகர் கோவில் தெருவில் வடிகால் கட்டுதல். | 1,50,000 | 50,000 | திரு. எஸ். கண்ணன் |
| 18 | வார்டு எண் 27, முதலியார்பட்டி தெருவில் ஆழ்துளை கிணறு | 2,50,000 | 83,333 | திரு. கே. தேசியப்பன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல். | | | |
| 19 | வார்டு எண் 30, மேட்டுக் கடைசி தெருவில் ஆழ்துளை கிணறு சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல். | 2,50,000 | 83,333 | திரு. கோ. வெங்கடேசன் |
| 20 | வார்டு எண் 31, கிருஷ்ணன் கோவில் தெருவில் ஆழ்துளை கிணறு சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் | 2,50,000 | 83,333 | திரு. அ. சடையப்பன் |
| 21 | வார்டு எண் 32, லட்சுமி நகர் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 5,00,000 | 1,66,667 | திரு. எஸ். கற்பகவேல் |
| 22 | வார்டு எண் 33, கிருஷ்ணன் கோவில் தெருவில் உடற்பயிற்சி கூடம் கட்டுதல். | 5,00,000 | 1,66,667 | திரு.சி.குழந்தைவேலு |
| | மொத்தம் | 58,70,000 | 19,56,667 | |

எனவே நமக்கு நாமே திட்டத்தின் கீழ் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கலாம், திட்ட மானியத் தொகை ரூ.39,13,333/- வழங்கவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு:-

மன்றம் அனுமதி வழங்கலாம். அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்கள் முன் ஒப்புதல் பெற்று முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**தீர்மானம் :- 11 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் : 12

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட கீழப்பட்டி பகுதியை சிவகாசி சாலையுடன் இணைக்கும் கால்வாய் மேல் அமைக்கப்பட்டுள்ள பழமையான கல் பாலத்தினை மாற்றி அமைத்து புதிய ஆர்.சி.சி. பாலம் அமைக்க பொது மக்களால் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இடம் ஆய்வு செய்யப்பட்டதில் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் வார்டு எண் 14, 15, 16 மற்றும் 28 ஆகிய நான்கு வார்டுகளை சேர்ந்த சுமார் 5000 பொதுமக்கள் பயன்படுத்தி வரும் பழமையான பாலம் சிவகாசி சாலையுடன் இணைக்கும் பாலமாக உள்ளது. இந்த பாலத்தின் வழியாகத்தான் அந்த பகுதி வாகன போக்குவரத்து மற்றும் இறந்தவர்களின் சடலங்களை எடுத்து செல்ல வேண்டியுள்ளது. மேற்படி பாலம் உள்ள கால்வாயானது பொதுப்பணித்துறையினை சார்ந்தது என்பதால் பொதுப்பணித்துறைக்கு தடையின்மை சான்று கோரி கடிதம் எழுதப்பட்டுள்ளது. மேற்படி பாலம் மிகவும் பழமையான குறுகிய பழுதடைந்த கல் பாலமாக உள்ளது. பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையின்படி மேற்படி பாலம் அகலமாக வாகனங்கள் போக்குவரத்திற்கு ஏற்றவாறு அமைத்து கொடுத்தால் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உகந்ததாக இருக்கும். ஆகவே பாலம் அமைக்க ரூ.165.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிதி நிலை சீராக இல்லாததால் இப்பணியினை நகராட்சி நிதியில் மேற்கொள்ள வாய்ப்பு இல்லாத சூழ்நிலை உள்ளது. எனவே அரசின் Capital Grant fund ( CGF ) அல்லது வேறு தகுதியான திட்டத்தின் கீழ் மேற்படி திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு:-

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் :- 12 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் : 13

கணிணி வரி வசூல் மையத்தில் உள்ள பிரிண்ட்டர் அதிக பயன்பாட்டின் காரணமாக பழுதடைந்து தொடர்ந்து இயக்க இயலாத சூழ்நிலை உள்ளது. 2021-22 நிதி ஆண்டில் இறுதியில் தீவிர வரி வசூல் பணி நடைபெறுவதால் புதிய Dot Matrix Printer உடன் வாங்க வேண்டியுள்ளது. எனவே புதிய Dot Matrix Printer வாங்கவும் அதற்கான உத்தேச செலவு ரூ.30,000/- க்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு:-

மன்றம் அனுமதி வழங்கலாம். அவசர அவசியம் கருதி விலைப்புள்ளிகள் கோரியதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

( ந.க.எண் 1817/2022/ இ1)

**தீர்மானம் :- 13 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் : 14

நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள சுமார் 25 எண்ணம் கணிணிகளுக்கு Key Board, Mouse ஆகியவை அடிக்கடி பழுது ஏற்பட்டு வருவதால் அதனை உடனடியாக மாற்றம் செய்ய Key Board, Mouse வாங்க வேண்டியது அவசியமாகின்றது. எனவே Key Board, Mouse மற்றும் Toner வாங்கவும் அதற்கான செலவு தொகை ரூ.30,000/- க்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு:-

நகராட்சி அலுவலக கணிணிகளுக்கு key Board, Mouse வாங்கவும் அதற்கான செலவு தொகை ரூ.30,000/- க்கு அனுமதி வழங்கலாம். விலைப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

( ந.க.எண் 2084/2022/ இ1)

**தீர்மானம் :- 14 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் : 15

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் டிப்பர் லாரி வாகன எண் TN-67-AX-5009 வாகனத்திற்கு வாகன காப்பீட்டு காலம் 4.4.2022 ல் முடிவடைவதால் மேற்படி வாகனத்திற்கு 2022-23 ம் ஆண்டுக்கு வாகன காப்பீட்டுத் தொகை ரூ.39654/- ஐ யுனைடெட் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

மன்ற அனுமதியை எதிர்நோக்கி காப்பீட்டுத் தொகை செலுத்தியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க. 4036 /2013/ எச்2)

**தீர்மானம் :- 15 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் : 16

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பகுதிகளில் உள்ள 33 வார்டுகளில் தினசரி பொது சுகாதார பணிகளான திடக்கழிவுகள் வாங்குவது, வாறுகாலில் மண் அகற்றுவது, நகரின் பிராதான சாலைகள் வணிக வளாகங்கள் ஆகியவற்றில் திடக்கழிவுகளை அகற்றி சுத்தம் செய்வது, போன்ற சுகாதாரப் பணிகள் இந்நகராட்சி தூய்மை பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் இந்நகராட்சியில் செயல்பட்டு வரும் நான்கு நுண் உரக்குடில் மையங்களுக்கு தினசரி கொண்டு செல்லும் மக்கும் ஈரக்கழிவுகளை உலர வைத்து அரைத்து உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்வது, திருவிழாக் காலங்களில் சுகாதார பணிகள் மேற்கொள்வது மற்றும் வீடு வீடாக சென்று மக்கும் குப்பை மக்காத குப்பை மறுசுழற்சி குப்பை எனத் தனித்தனியாக பிரித்து சேகரித்தல் போன்ற தூய்மை பணிகளுக்கு தூய்மை பணியாளர்கள் பயன்படுத்த தளவாடச் சாமான்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் தேவைப்படுகிறது. மேற்படி தளவாடச் சாமான்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கி மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால் அவைகள் பயன்படுத்த முடியாத அளவிற்கு சிதலமடைந்து விட்டன. இதன் காரணமாக தினசரி தூய்மை பணியாளர்களால் சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள சிரமப்படுகின்றனர். இந்நகராட்சியில் உள்ள 33 வார்டுகளில் தினசரி சுகாதாரப் பணிகள் தொய்வின்றி மேற்கொள்வதற்கு தூய்மை பணியாளர்கள் பயன்படுத்த தேவையான தளவாடச் சாமான்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களை முதற்கட்டமாக 2022-23 ம் ஆண்டுக்கு வாங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ.7,60,000/- நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 1767/2022/எச் 1

**தீர்மானம் :- 17 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் : 17

கணிணி வரி வசூல் மையத்திற்கு புதிய Matrix Printer வாங்க விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் 24.03.22 ம் தேதி பின்வரும் 3 விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | பணி விவரம் | Nos | Abi Energy corp Puliyangudi | Chandra enterprises, Tirupur. | Vishin battery sales and service, Rajapalayam |
